**செ. கு. எண்:091** **நாள் :30.09.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 30.9.2015

வேளாண் தொழிலை மேற்கொண்டுள்ள உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெற பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. விவசாய இடுபொருட்களை உரிய காலத்தே வழங்குதல், தரமான விதைகளை உற்பத்தி செய்து வழங்குதல், நுண்ணீர் பாசனத் திட்டம் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களுக்குத் தேவையான மானியம் வழங்குதல், வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் வகையில் வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தை செயல்படுத்துதல், புதிய உத்திகளையும் தொழில்நுட்பங்களையும் விவசாயிகள் கடைபிடிக்கும் வகையிலான நடவடிக்கைகளை எடுத்தல் என பல்வேறு உத்திகளை கடைபிடிப்பதன் காரணமாக உணவு தானிய உற்பத்தியில் ஆண்டு தோறும் புதிய சாதனைகளை தமிழ்நாடு படைத்து வருகிறது.

வேளாண் உற்பத்தியை பெருக்குவதோடு விளை பொருட்களுக்கு உரிய விலை வழங்கப்பட்டால் தான் வேளாண் பெருமக்களின் வாழ்வு வளம் பெறும். இந்த அடிப்படையிலேயே, மத்திய அரசு நிர்ணயிக்கும் நெல் கொள்முதல் விலையுடன் கூடுதலாக ஊக்கத் தொகையை எனது தலைமையிலான அரசு ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது.

நடப்பு காரிஃப் பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு சமீபத்தில் அறிவித்துள்ளது. சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,450 ரூபாய் எனவும், சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,410 ரூபாய் எனவும் மத்திய அரசு நெல்லுக்கான ஆதார விலையை நிர்ணயித்துள்ளது.

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,410 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் 50 ரூபாய் வழங்கவும்; சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,450 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் 70 ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,460 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 1,520 ரூபாயும் வழங்கப்படும். நெல்லுக்கான இந்த புதிய கொள்முதல் விலை 1.10.2015 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை வெளிச்சந்தையில் அதிகமாக உள்ள காரணத்தால், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை மிகக் குறைந்த விலையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவை கிலோ 30 ரூபாய்க்கும், ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும் வழங்கப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவை 30.9.2015 வரை வழங்கிட நான் கடந்த ஆண்டு உத்தரவிட்டிருந்தேன். வெளிச் சந்தையில் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர் அளவில் உள்ளதால், ஏழை, எளிய, நடுத்தர மக்களின் நலன் கருதி நியாய விலைக் கடைகளில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும்

பாமாயில் வழங்கிடும் இந்த சிறப்பு பொது விநியோகத் திட்டத்தினை மேலும் ஓராண்டுக்கு அதாவது 30.9.2016 வரை நீட்டிக்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் படி ஒரு கிலோ துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு தலா 30 ரூபாய்க்கும், ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும் தொடர்ந்து வழங்கப்படும்.

நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் வழங்கிடும் இத்திட்டத்திற்கென தமிழக அரசுக்கு ஆண்டிற்கு 2,000 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**